27-03-2022 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 07.03.1990

ஆட்சிபுரியும் மற்றும் கட்டுப்படுத்தும் சக்தியினால் சுயராஜ்யத்தின் பிராப்தி

இன்று குழந்தைகளுடைய சினேகி பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் விசேஷமாக இரண்டு விசயங்களில் சோதனை செய்து கொண்டு இருந்தார்கள். அன்பின் பிரத்யட்ச சொரூப மாகக் குழந்தைகளை சம்பன்னம் மற்றும் சம்பூரணம் ஆக்க வேண்டும். ஒவ்வொருவரிடத் திலும் ஆட்சிபுரியும் மற்றும் கட்டுப்படுத்தும் சக்தி எந்தளவு வந்துள்ளது - இன்று இதைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். எவ்வாறு சரீரத்தின் ஸ்தூல கர்மேந்திரியங்கள் ஆத்மாவின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றனவோ, எப்பொழுது விரும்புகின்றீர்களோ, எப்படி விரும்புகின்றீர் களோ, எங்கே விரும்புகின்றீர்களோ, அவ்வாறே இயக்க முடிகிறது மற்றும் இயக்கிக்கொண்டு இருக்கின்றீர்கள். கட்டுப்படுத்தும் சக்தியும் உள்ளது. எவ்வாறு கைகள், கால்கள் ஸ்தூல சக்தி களோ, அவ்வாறு மனம், புத்தி, சமஸ்காரம் என்பவை ஆத்மாவின் சூட்சும சக்திகள் ஆகும். சூட்சும சக்திகளை கட்டுப்படுத்து வதற்கான சக்தி அதாவது மனதை, புத்தியை, சமஸ்காரத்தை எப்பொழுது விரும்புகின்றீர்களோ, எங்கே விரும்பு கின்றீர்களோ, எப்படி விரும்புகின்றீர்களோ, எவ்வளவு நேரம் விரும்புகின்றீர்களோ அப்படி விருப்பத்திற்கேற்ப கட்டுப்படுத்தும் சக்தி மற்றும் ஆட்சிபுரியும் சக்தி வந்துவிட்டதா? ஏனெனில், இந்த பிராமண வாழ்வில் மாஸ்டர் அல்மைட்டி அத்தாரிட்டி (சர்வ வல்லமை பொருந்தியவர்) ஆகின்றீர்கள். இந்த சமயத்தின் பிராப்தி முழு கல்பத்திலும் இராஜ்ய ரூபம் மற்றும் பூஜாரி ரூபத்தில் இருந்து வருகிறது. எந்தளவு அரை கல்பத்திற்கு விஷ்வத்தின் இராஜ்ய சக்தியை அடைகின்றீர்களோ, எந்தளவு சக்திசாலி இராஜ்ய பதவி அல்லது பூஜ்ய பதவி கிடைக்கின்றதோ, அந்தளவே பக்தி மார்க்கத்திலும் சிரேஷ்டமான பூஜாரி ஆகின்றீர்கள். பக்தியிலும் கூட சிரேஷ்ட ஆத்மாவிற்கு மனம், புத்தி, சமஸ்காரங்களின் மீது கட்டுப்படுத்தும் சக்தி உள்ளது. பக்தர்களில் கூட சக்திசாலியான பக்தர்களாக வரிசைக் கிரமமாக ஆகின்றார்கள் அதாவது எந்த இஷ்ட தேவதையினுடைய பக்தி செய்ய விரும்பு கின்றார்களோ, எவ்வளவு நேரம் செய்ய விரும்புகின்றார்களோ, எந்த விதியினால் செய்ய விரும்புகின்றார்களோ - அப்படிப்பட்ட பக்தியினுடைய பலனாக பக்தியினுடைய விதியின் அனுசாரம் திருப்தி, ஒருமுகப்பாடு, சக்தி மற்றும் குஷியை அடைகின்றார்கள். ஆனால், இராஜ்ய பதவி மற்றும் பக்தியினுடைய சக்தியை பிராப்தியாக அடைவதற்கான ஆதாரம் இந்த பிராமண பிறப்பு ஆகும். எனவே, இந்த சங்கமயுகத் தினுடைய சிறிய பிறவி முழு கல்பத்தினுடைய அனைத்து பிறவிகளுக்கும் ஆதாரம் ஆகும். எவ்வாறு இராஜ்யம் செய்வதில் விசேஷமானவர் கள் ஆகின்றீர்களோ, அவ்வாறே பக்த நிலையிலும் விசேஷமானவர்கள் ஆகின்றீர்கள், சாதாரண மானவர்கள் அல்ல. பக்தி மாலையில் வரும் பக்தர்கள் வேறு, ஆனால், தானே பூஜைக்குரிய வர்கள், தானே பூஜாரி என்ற நிலை அடையும் ஆத்மாக்களாகிய உங்களுடைய பக்தியும் விசேஷமானது ஆகும். எனவே, இன்று பாப்தாதா குழந்தைகளுடைய இந்த மூல ஆதாரமான பிறவியைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். ஆதியில் இருந்து இப்பொழுது வரை பிராமண வாழ்வில் ஆட்சிபுரியும் சக்தி மற்றும்

கட்டுப்படுத்தும் சக்தி சதா மற்றும் எத்தனை சதவிகிதம் இருந்துள்ளது? அதிலும் முதலில் தன்னுடைய சூட்சும சக்திகளின் ரிசல்ட்டை சோதனை செய்யுங்கள். ரிசல்ட்டில் என்ன தென்படுகிறது? இந்த மூன்று விசேஷ சக்திகளான மனம், புத்தி, சமஸ்காரத்தின் மீது கட்டுப்பாடு உள்ளது என்றால் இந்த நிலையையே சுயராஜ்ய அதிகாரி நிலை என்று சொல்லப்படுகிறது. எனவே, இந்த சூட்சும சக்திகள் தான் ஸ்தூல கர்மேந்திரியங் களை விரதம் மற்றும் நியமத்தின் படி இயக்க முடியும். ரிசல்ட் என்ன பார்த்தார்கள்? எப்பொழுது, எங்கே மற்றும் எவ்வாறு என்ற இந்த மூன்று விசயங்களில் இப்பொழுது யதாசக்தி உள்ளது. சர்வசக்தி இல்லை, ஆனால், யதாசக்தி உள்ளது. இதையே இரட்டை அயல்நாட்டினர் தன்னுடைய மொழியில் சம்திங் (கொஞ்சம், சிறிதளவு) என்ற வார்த்தையை பயன்படுத்து கின்றார்கள். எனில், இவர்களை அல்மைட்டி அத்தாரிட்டி என்று சொல்ல முடியுமா? சக்தி வாய்ந்தவர் களாக இருக்கின்றீர்கள் ஆனால், அனைத்திலும் இருக்கின்றீர்களா? உண்மையில் இதையே பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் என்று சொல்லப்படுகிறது. ஒருவருக்கு எந்தளவு சுயத்தின் மீது இராஜ்யம் செய்யத் தெரிகிறதோ அதாவது தன்னை நடத்தக்கூடிய மற்றும் அனைவரையும் நடத்துவிக்கக்கூடிய விதி தெரிகிறதோ, அவரே நம்பரில் முன்னால் வருகின்றார். இந்த அஸ்திவாரத்தில் ஒருவேளை யதாசக்தி உள்ளது என்றால் தானாகவே நம்பர் பின்னால் சென்றுவிடுகிறது. யாருக்கு தன்னை நடத்துவிக்கவும் மற்றும் நடக்கவும் தெரிகிறதோ, அவர் பிறரையும் கூட எளிதாக நடத்துவிக்க முடியும் அதாவது கையாளும் சக்தி வந்துவிடுகிறது. கையாளும் சக்தி யானது பிறரைக் கையாளுவதற்காக மட்டும் அல்ல. யாரால் தன்னுடைய சூட்சும சக்திகளை கையாள முடிகிறதோ, அவர்களால் பிறரையும் கூட கையாள முடியும். எனவே, தன்னைக் கட்டுப்படுத்தும் சக்தி மற்றும் ஆட்சிபுரியும் சக்தியானது, அனைவரையும் யதார்த்தமாகக் கையாளும் சக்தியாக ஆகிவிடுகிறது. அஞ்ஞானி ஆத்மாக் களை சேவை மூலமாகக் கையாளுவதாக இருந்தாலும், பிராமண பரிவாரத்தில் அன்பு நிறைந்த, திருப்தி நிறைந்த உறவை மேற்கொள்வதாக இருந்தாலும் - இரண்டிலும் வெற்றி அடைந்துவிடு வார்கள். ஏனெனில், சில குழந்தைகள் தந்தையை அறிந்துகொள்வது, தந்தையினுடையவர் ஆவது மற்றும் தந்தையிடம் அன்பு செலுத்துவது - இதை மிகவும் சகஜமாக அனுபவம் செய்கின்றார்கள், அனைத்து பிராமண ஆத்மாக்களுடன் இணைந்து செல்வது - இதில் சம்திங் உள்ளது என்று சொல்கின்றார்கள். இதற்கான காரணம் என்ன? தந்தையிடம் அன்பு செலுத்துவது ஏன் சகஜமாக உள்ளது? ஏனெனில், உள்ளத்தின் அன்பானது வலுவாக உள்ளது. அன்பில் இணைவது சகஜமாக உள்ளது. யார் மீது அன்பு உள்ளதோ, அவர்களுடைய போதனைக்கான சமிக்ஞை ஏதாவது கிடைப்பது கூட அன்பானதாகத் தோன்றும் மற்றும் அவர்கள் என்ன சொன்னார்களோ, அது என்னுடைய நன்மைக்காக சொன்னார்கள் என்ற அனுபவம் எப்பொழுதும் உள்ளத்தில் ஏற்படுகிறது. ஏனெனில், அவர்கள் மீது உள்ளத்தின் சிரேஷ்டமான பாவனை உள்ளது. எவ்வாறு உங்களுடைய உள்ளத்தில் அவர்கள் மீது சிரேஷ்டமான பாவனை உள்ளதோ, அவ்வாறே உங்களுடைய சுபபாவனைக்கான கைம்மாறு பிறர் மூலமாகவும் பிராப்தம் ஆகிறது. எவ்வாறு குகையில் ஒலி எழுப்பினீர்கள் என்றால் அதே ஒலி திரும்ப உங்களிடம் வருகின்றது. எவ்வாறு தந்தையின் மீது வலுவான, துண்டிக்கப்படாத, உறுதியான அன்பு உள்ளதோ, சிரேஷ்ட பாவனை உள்ளதோ, நம்பிக்கை உள்ளதோ, அதுபோன்றே பிராமண ஆத்மாக்கள் வரிசைக்கிரமமாக

இருக்கும்போதிலும் ஆன்மிக அன்பானது வலுவானதாக, துண்டிக்கப்படாததாக உள்ளதா? வெவ்வேறு நடத்தை, வெவ்வேறு சமஸ்காரத்தைப் பார்த்து அன்பு செலுத்துகின்றீர்கள் என்றால் அது வலுவானதாக, துண்டிக்கப்படாததாக இருக்காது. எந்த ஒரு ஆத்மாவினுடைய நடத்தை மற்றும் குணம் அல்லது சமஸ்காரம் தனக்கோ அல்லது பிறருக்கோ உள்ளம் விரும்பும்படியாக இல்லை என்றால் அன்பின் சதவிகிதம் குறைந்து விடுகிறது. ஆனால், ஆத்மாவினுடைய சிரேஷ்ட ஆத்மா என்ற உணர்வினால் ஏற்படும் ஆன்மிக அன்பில் சதவிகிதம் இருக்காது. எப்படிப்பட்ட சம்ஸ்காரமாக இருக்கட்டும், நடத்தையாக இருக்கட்டும் ஆனால், முழு கல்பத்தில் பிராமண ஆத்மாக்களுடன் வலுவான சம்பந்தம் உள்ளது, ஈஸ்வரிய பரிவாரம் ஆகும். தந்தை ஒவ்வொரு ஆத்மாவையும் விசேஷமாகத் தேர்ந்தெடுத்து ஈஸ்வரிய பரிவாரத்தில் கொண்டு வந்திருக்கின்றார். தானாக வரவில்லை, தந்தை கொண்டு வந்திருக்கின்றார். எனவே, தந்தையை முன்னால் வைப்பதனால் ஒவ்வொரு ஆத்மா மீதும் வலுவான ஆன்மிக அன்பு ஏற்பட்டுவிடுகிறது. எந்த ஒரு ஆத்மாவினுடைய ஏதோ ஒரு விசயம் பிடிக்கவில்லை எனும்போதே அன்பில் வித்தியாசம் வருகிறது. அந்த சமயத்தில் புத்தியில் இதை வைத்துக் கொள்ளுங்கள் அதாவது இந்த ஆத்மாவை தந்தை விரும்பியிருக்கின்றார், அவசியம் இவர்களிடம் ஏதோ விசேஷத்தன்மை உள்ளதனாலேயே தந்தை விரும்பி இருக்கின்றார். ஆரம்பத்தில் இருந்தே பாப்தாதா குழந்தைகளுக்கு இதை சொல்லிக்கொண்டே இருக்கின்றார்கள் - 36 குணங்களில் ஒருவரிடத்தில் 35 குணங்கள் இல்லை, ஆனால், ஒரு குணம் மட்டும் விசேஷமாக உள்ளது என்பதனாலே தந்தை அவரை விரும்பி இருக்கின்றார். தந்தை அவருடைய 35 அவகுணங் களைப் பார்த்தாரா அல்லது ஒரே ஒரு குணத்தைப் பார்த்தாரா? என்ன பார்த்தார்? அனைத்தையும் விட பெரிய திலும் பெரிய குணம் அல்லது விசேஷத்தன்மை தந்தையை அறிந்து கொள்ளும் புத்தி, தந்தையினுடையவர் ஆகுவதற்கான தைரியம், தந்தையின் மீது அன்பு செலுத்தும் விதி, எது முழு கல்பத்திலும் தர்ம பிதாக்களிடமும் இல்லையோ, இராஜ்ய தலைவர்களிடமும் இல்லையோ, தனவான்களிடமும் இல்லையோ ஆனால், அது அந்த ஆத்மாவிடம் உள்ளது. நீங்கள் எப்பொழுது தந்தையிடம் வந்தீர்களோ, அப்பொழுது குணம் நிறைந்தவராகவா வந்தீர்கள்? தந்தை உங்களுடைய பலவீனங்களைப் பார்த்தாரா என்ன? என்று தந்தை உங்கள் அனைவரிடமும் கேட்கின்றார். நீங்கள் என்னுடையவர்களாக இருந்தீர்கள், இருக்கின்றீர்கள் மற்றும் எப்பொழுதும் ஆகுவீர்கள் என்ற தைரியத்தை அதிகப்படுத்தினார் அல்லவா. எனில் நீங்கள் தந்தையைப் பின்பற்றுங் களேன்! எப்பொழுது விசேஷ ஆத்மா எனப் புரிந்து ஒருவரைப் பார்ப்பீர்களோ, சம்பந்தம், தொடர் பில் வருவீர்களோ அப்பொழுது தந்தையை முன்னால் வைப்பதனால் ஆத்மாவில் தானாகவே ஆன்மிக அன்பு வெளிப்படுகிறது. உங்களுடைய அன்பினால் அனைவருடைய அன்பிற்குரிய வர்கள் ஆகிவிடுவீர்கள் மற்றும் ஆன்மிக அன்பினால் சதா அனைவரின் மூலம் சத்பாவனை (நல்ல பாவனை), சகயோகத்தின் பாவனை தானாகவே ஆசீர்வாதங்கள் என்ற ரூபத்தில் உங்களுக்குக் கிடைக்கும். இதையே ஆன்மிக யதார்த்தமான, சிரேஷ்டமான கையாளும் தன்மை என்று கூறுகின்றார்கள்.

பாப்தாதா இன்று புன்னகை செய்து கொண்டு இருந்தார்கள். குழந்தைகளுக்குள் மூன்று வார்த்தைகளின் காரணத்தினால் கட்டுப்படுத்தும் சக்தி, ஆட்சிபுரியும் சக்தி குறைந்துவிடுகிறது. அந்த மூன்று வார்த்தைகள் என்னவென்றால் 1.

வொய் (ஏன்), 2. வாட் (என்ன), 3. வான்ட் (தேவை) என்பவை ஆகும். இந்த மூன்று வார்த்தைகளை அழித்துவிட்டு ஒரு வார்த்தை சொல்லுங்கள். வொய் என்பது வரும்போது ஒரு வார்த்தை சொல்லுங்கள் - வாஹ் (ஆஹா), வாட் என்ற வார்த்தை வரும்போது வாஹ் (ஆஹா) என்று சொல்லுங்கள். ஆஹா என்ற வார்த்தை சொல்ல வருகிறது தானே. ஆஹா பாபா! ஆஹா நான்! மற்றும் ஆஹா டிராமா! ஆஹா என்று மட்டும் சொல்லுங்கள் அப்பொழுது இந்த மூன்று வார்த்தைகளும் அழிந்து போய்விடும். பாப்தாதா என்ன விளையாட்டு பார்த்தார்கள் என்பதை அன்றொரு நாள் சொன்னார்கள் அல்லவா. முன்னால் உருவாக்கப்பட்ட ஒரு சித்திரத்தில் யோகி யோகம் செய்து கொண்டு இருக்கின்றார், புத்தியை ஒருமுகப்படுத்திக் கொண்டு இருக்கின்றார், சமநிலையில் வைத்துக் கொண்டு இருக்கின்றார், சமநிலையின் தராசு காட்டப்பட்டு இருக்கும், எந்தளவு புத்தியை சம நிலையில் வைக்கின்றாரோ, அந்தளவு ஒரு குரங்கு வந்து அமர்ந்துவிடுவதாகக் காண்பிக்கப் பட்டுள்ளது. இந்த மூன்று விசயங்களின் குரங்கு வந்துவிடுகிறது, எனில், தராசு என்னவாகும்! தடு மாற்றம் ஏற்பட்டுவிடும், சமநிலை இருக்காது. எனவே, இந்த மூன்று வார்த்தைகள் சமநிலையை சமாப்தி செய்துவிடுகின்றன, புத்தியை ஆட வைத்துவிடுகின்றன. குரங்கால் ஓய்வாக இருக்க முடியுமா என்ன? வேறு எதுவும் இல்லை என்றாலும் வாலையாவது ஆட்டிக் கொண்டு இருக்கும். எனவே, இங்கே கூட சமநிலை இல்லாத காரணத்தினால் தந்தை மூலம் ஒவ்வொரு அடியில் ஆசீர்வாதங்கள் என்ன கிடைக்கின்றனவோ மற்றும் ஆன்மிக அன்பின் காரணத்தினால் பரிவாரத்தின் மூலம் என்ன ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றனவோ அதிலிருந்து வஞ்சிக்கப்பட்டவர்களாக ஆகிவிடுகின்றார்கள். எவ்வாறு தந்தையுடன் சம்பந்தம் வைப்பது அவசிய மானதோ, அதுபோன்று ஈஸ்வரிய பரிவாரத்துடன் சம்பந்தம் வைப்பது கூட மிகவும் அவசியமானதாகும். முழு கல்பத்தில் முதல் எண்ணில் வரும் ஆத்மா பிரம்மா பாபா மற்றும் ஈஸ்வரிய பரிவாரத்தின் சம்பந்தம், தொடர்பில் வர வேண்டும். நல்லது. தந்தையோ நம்முடையவர், நானோ தந்தையினுடையவர் என்று மட்டும் நினைக்கக் கூடாது. இது கூட மதிப்புடன் தேர்ச்சி பெறுவதன் அடையாளம் கிடையாது, ஏனென்றால், நீங்கள் சந்நியாசி ஆத்மாக்கள் கிடையாது, ரிஷி, முனிவரின் ஆத்மாக்கள் கிடையாது. உலகத்தில் இருந்து ஒதுங்கி இருப்பவர்கள் கிடையாது, ஆனால், விஷ்வத்திற்கு உதவியாளர் ஆகக்கூடிய ஆத்மாக் கள். விஷ்வத்திலிருந்து ஒதுங்குபவர்கள் அல்ல, விஷ்வ கல்யாணகாரி ஆவீர்கள். பிராமண ஆத்மாக்களின் விசயத்தை விடுங்கள், ஆனால், இயற்கையையும் மாற்றுவதற்கு உதவி செய்பவர்கள் நீங்கள். பரிவாரத்தின் அழிவற்ற அன்பு என்ற நூலின் நடுவிலிருந்து வெளிவர முடியாது. வெற்றி இரத்தினம் அன்பு என்ற நூலின் நடுவிலிருந்து வெளிவர முடியாது. ஆகையினால், ஒருபொழுதும் எந்த விசயத்தில் இருந்தும், எந்த இடத்தில் இருந்தும், எந்த சேவையில் இருந்தும், எந்த துணையிடம் இருந்தும் ஒதுங்கி தன்னுடைய நிலையை நன்றாக ஆக்கிக் காட்டுவேன் என்ற இந்த சங்கல்பம் செய்யக் கூடாது. இவர்களுடன் நான் ஒத்துப்போக முடியாது, அவர்களுடன் ஒத்துப் போவேன், இந்த இடத்தில் முன்னேற்றம் ஏற்படாது, மற்றொரு இடத்தில் ஏற்படும், இந்த சேவையில் தடை உள்ளது, இன்னொரு சேவையில் நன்றாக இருக்கும் என்று சொல்கின்றார்கள் அல்லவா. இவை அனைத்தும் விலகிப் போவதற்கான விசயங்கள். ஒருவேளை, ஒரு முறை இந்தப் பழக்கத்தை தனக்குள் கொண்டு வந்துவிட்டால் இந்தப் பழக்கம் உங்களை

எங்கேயும் கூட நிலைத்திருக்க விடாது, புத்தியை ஒருமுகப்பட்டு இருக்கவிடாது, ஏனெனில், புத்தியை மாற்றுவதற்கான பழக்கம் ஆகிவிட்டது. இது கூட பலவீனம் என்றே கணக்கிடப்படும், முன்னேற்றம் என்று கணக்கிட முடியாது. எப்பொழுதும் தன் மீது சுபமான நம்பிக்கை வைத்திடுங்கள், நம்பிக்கையற்றவர் ஆகாதீர்கள். எவ்வாறு தந்தை ஒவ்வொரு குழந்தை மீதும் சுபமான நம்பிக்கை வைத்திருக்கின்றார்! எப்படிப்பட்டவராக இருந்தாலும் தந்தை கடைசி எண்ணில் உள்ள குழந்தை மீதும் கூட ஒருபோதும் மனம் உடைந்து போவதில்லை. எப்பொழுதுமே நம்பிக்கை வைத்திருக்கின்றார். எனவே, நீங்களும் கூட தன் மீது, பிறர் மீது, சேவையில் நம்பிக்கை இழந்தவராக, மனம் உடைந்து போனவராக ஆகாதீர்கள். தில்ஷாஹ் (உள்ளத்தால் அரசர்) ஆகுங்கள். ஷாஹ் என்றால் பரந்த உள்ளம், சதா பெரிய உள்ளம். எந்தவொரு பலவீனமான சமஸ்காரத்தையும் தாரணை செய்யாதீர்கள். மாயை வெவ்வேறு ரூபத்தில் பலவீனம் ஆக்குவதற்கான முயற்சி செய்கிறது. ஆனால், நீங்கள் மாயையைப் பற்றிய ஞானம் நிறைந்தவர் ஆவீர்கள் அல்லவா அல்லது அரைகுறை ஞானம் உள்ளதா? மாயை புதுப்புது ரூபத்தில் வருகிறது, பழைய ரூபத்தில் வருவதில்லை என்பதையும் நினைவில் வைத்திடுங்கள். ஏனெனில், இவர்கள் அறிந்து கொள்வார்கள் என்று அது கூட அறிந்திருக்கிறது. விசயம் அதுவே தான் இருக்கும் ஆனால், புதிய ரூபத்தை தாரணை செய்துவிடுகிறது. புரிந்ததா! நல்லது.

டீச்சர்கள் மாயையைப் பற்றிய ஞானம் நிறைந்தவர்களாக (நாலெட்ஜ்ஃபுல்) இருக்கின்றீர்களா? வெறும் ஞானம் மட்டுமல்ல, ஆனால், நாலெட்ஜ்ஃபுல் ஆக இருக்கின்றீர்களா? தந்தையை அறிந்து கொண்டோம் - இப்படி மட்டும் நினைக்காதீர்கள், மாயையையும் அறிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது பந்தனத்தில் கட்டுப்பட்டு இருக்கின்றீர்களா அல்லது கடினமாகத் தோன்றுகிறதா? இனிமையான பந்தனமாகத் தோன்றுகிறதா அல்லது கொஞ்சம் கடினமான பந்தனமாகத் தோன்றுகிறதா? இங்கேயோ அதிகமாக இறந்து போக வேண்டியதாக உள்ளது, தந்தை யினுடையவர் ஆகிவிட்டோம், இப்பொழுது இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும், எதுவரை செய்வது என்று யோசிக்கின்றீர்கள். ஒருவேளை, இது தெரிந்திருந்தால் வந்திருக்கவே மாட்டேன் - இப்படி சிந்தனை வருகிறதா? எங்கே அன்பு உள்ளதோ, அங்கே எதுவும் கடினமானதாக இருக்காது. விட்டில்பூச்சி கூட விளக்கில் பலியாகிவிடுகிறது. எனவே, சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் பரமாத்ம அன்பிற்குப் பின்னால் கடினத்தை அனுபவம் செய்ய முடியுமா என்ன? விட்டில்பூச்சியால் பலியாக முடிகிறது எனில், உங்களால் என்ன செய்ய முடியாது? எந்த நேரம் கடினமாக அனுபவம் ஆகிறதோ, அப்பொழுது அவசியம் அன்பின் சதவிகிதத்தில் வித்தியாசம் வந்துவிடுகிறது, ஆகையினால், கொஞ்ச சமயத்திற்கு கடினமாகத் தோன்றுகிறது. ஒருவேளை, கடினமானது என்றால் எப்பொழுதுமே கடினமானதாகத் தோன்ற வேண்டும், அவ்வப்பொழுது ஏன் கடினமானதாகத் தோன்றுகிறது? பரமாத்மா மற்றும் உங்களுக்கு நடுவில் ஏதாவது விசயம் வந்துவிடுகிறது, ஆகையினால், கடினமானதாக ஆகிவிடுகிறது மற்றும் சதவிகிதத்தில் வித்தியாசம் வந்துவிடுகிறது. அதை நடுவில் இருந்து எடுத்துவிடுங்கள், பிறகு, சகஜமாகிவிடும்.

டீச்சர்கள் என்றால் சுயம் தைரியத்தில் இருப்பவர்கள் மற்றும் பிறருக்கும்

தைரியத்தைக் கொடுப்பதற்கு நிமித்தமானவர்கள் என்று பாப்தாதா எப்பொழுதும் சொல்கின்றார்கள். இல்லையென்றால், டீச்சராக ஆனது எதற்காக? டீச்சர் என்றாலே மாணவருக்கும் நிமித்த மானவர்கள். பலவீனமானவருக்கு தைரியம் கொடுத்து முன்னேற்றும் சேவைக்கு நிமித்தம் ஆனவர்கள். வெற்றிகரமான டீச்சருடைய முதல் அடையாளமே அவர்கள் ஒருபொழுதும் தைரியமற்றவர்களாக ஆகமாட்டார்கள். யார் சுயம் தைரியத்துடன் இருக்கின்றார்களோ, அவர்கள் அவசியம் பிறருக்கும் தைரியம் கொடுப்பார்கள். தனக்குள்ளே தைரியம் குறைவாக இருந்தால் பிறருக்கும் கொடுக்க முடியாது. நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள தைரியமான குழற்தைகளாகி தந்தையினுடைய உதவியைப் பெறும் அதிகாரத்தை அனுபவம் செய்யக்கூடிய, சதா சுயராஜ்யத்தின் சக்திகளை ஒவ்வொரு நேரத்தின் அனுசாரம் பயன்பாட்டில் கொண்டு வரக்கூடிய, சதா தந்தை மற்றும் அனைத்து ஆத்மாக்களுடைய துண்டிக்கப்படாத சினேகி, சதா ஒவ்வொரு காரியத்தில், சம்பந்தம், தொடர்பில் ஆஹா, ஆஹா என்ற பாடல் பாடக்கூடிய அத்தகைய சர்வ வல்லமை பொருந்திய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் : தெüவான (பிளைன்) புத்தி உடையவராகி சேவையின் திட்டத்தை (பிளானை) உருவாக்கக் கூடிய யதார்த்தமான சேவாதாரி ஆகுக.

யார் சுயத்தினுடைய மற்றும் அனைவருடைய சேவையை சேர்த்து செய்கின்றார்களோ, அவர்களை யதார்த்தமான சேவாதாரி என்று சொல்லப்படுகிறது. சுயத்தினுடைய சேவையில் அனைவருடைய சேவை அடங்கி உள்ளது. பிறருடைய சேவை செய்வது மற்றும் தன்னுடைய சேவையில் கவனக்குறைவுடன் இருப்பது கூடாது. சேவையில் சேவை மற்றும் யோகம் இரண்டுமே இணைந்து இருக்க வேண்டும். இதற்காக பிளைன் (தெளிவான) புத்தி உடைய வராகி சேவையினுடைய பிளான் (திட்டம்) போடுங்கள். பிளைன் புத்தி என்றால் நிமித்தம் மற்றும் படைக்க வேண்டும் என்ற பாவனையைத் தவிர வேறு எந்தவொரு விசயமும் புத்தியைத் தொடக் கூடாது. எல்லைக்குட்பட்ட பெயர், எல்லைக்குட்பட்ட புகழ் என்பது கூடாது, ஆனால், பணிவு இருக்க வேண்டும். இதுவே சுப்பாவனை மற்றும் சுபவிருப்பத்திற்கான விதை ஆகும்.

சுலோகன்: ஞான தானத்தின் கூடவே குணதானம் செய்யுங்கள், அப்பொழுது வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும்.